DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 31/2024 Crime No. 412/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW-1- விஸ்வநாதன் | Village | |
| Father Name | குருநாதன் | Taluk | |
| Age | 52 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் குருப்பநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, தற்காலிகமாக போஸ்ட் மேனாக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சக்திவேல் என் அண்ணன் ஆவார். கடந்த 28.10.20203 ம் தேதியன்று, மதியம் சுமார் 03.00 மணியளவில், குருப்பநாயக்கன்பாளையம், சிவசக்தி மாவு நிலையம் முன்பு ரோட்டின் இடது ஓரமாக என் அண்ணன் நின்று கொண்டிருந்ததாகவும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த டேங்கர் லாரி என் அண்ணன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அதில் அடிப்பட்ட என் அண்ணன் சம்பவயிடத்திலேயேஇறந்துவிட்டதாக தகவல் கிடைத்து நான் அங்கு சென்று, நான் எனது அண்ணனை ஒரு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் என் பவானி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு, நான் பவானி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மறுநாள் பவானி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற எனது அண்ணனின் பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

மேற்படி விபத்து நடைபெற்றபோது விபத்தை நான் பார்த்ததாகவும், நானும், அருகில் இருந்தவர்களும், என் அண்ணன் அருகில் சென்று பார்த்ததாகவும், நீங்கள் போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.